## நீதிச்சேவை ஆணைக்குழு

## நீதிச்சேவை ஆணைக்குழு செயலகத்தின் விசாரணை அதிகாரி தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் (திறந்த) - 2025

நீதிச்சேவை ஆணைக்குழு செயலகத்தின் விசாரணை அதிகாரி தரம் II பதவிக்காக உள்ள 04 வெற்றிடத்திற்கு தகுதியானவரைத் தெரிவு செய்வதற்கான தகுதியான இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **பதவி ஆட்சேர்ப்பு செய்யும் விதம்** :

நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சையின் குழுவின் மூலம் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் வழங் கப்படும் புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

02. **சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள்** :

2.1 இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித் துடையதுமாகும், விதவைகள் மற்றும் அநாதைகள்/ தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

2.2 இப்பதவிக்கு நியமனம் பெறுகின்ற உத்தி யோகத்தர்கள் மூன்று வருட (03) நன்னடத்தைக் காலத்திற்கு உட்படுதல் வேண்டும் என்பதுடன் அந்த மூன்று (03) காலத்தினுள் முதலாவது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

2.3 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 18/2020 மற்றும் அதனுடன் தொடர்புடைய சுற்றறிக்கைக்கு அமைய உரிய மட்டத்திற்கான மொழி தொடர்பான தகுதிகளை அடைய வேண்டும்.

2.4 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, அரசாங்க நிதிப் பிரமாணங்கள், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகள் என்பவற்றிற்கு இந்நியமனம் உட்பட்டதாக இருக்கும்.

2.5 ஒழுக்காற்று நடவடிக்கை பெற்று இருக்கலாகாது.

3. **சம்பள அளவுத்திட்டம்** :

25.03.2025 ஆந் திகதிய 10/2025 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் I உப பிரிவுக்கு ஏற்ப இப்பதவியின் மாதாந்த அளவு திட்டமானது ரூ. 58,660.00 - 10 x 1,190 - 11 x 1,360 - 15 x 1,670 - - ரூ. 110,570.00 – (MN 5 - 2025) ஆகும்.

அத்துடன் சம்பளம் வழங்கப்படுவது அச்சுற்றறிக்கையின் விதிமுறைகளுக்கு ஏற்ப அதன் II உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆகும். இதற்கு மேலதிகமாக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அரசினால் காலத் திற்கு காலம் வழங்கப்படும் கொடுப்பனவுகளும் உரித் தாகும்.

04. **ஆட்சேர்ப்புக்கான தகுதிகள்:**

4.1 பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் பெறப்பட்ட சட்டம், குற்றவியல் மற்றும் சமூகவியல் தொடர்பான பட்டத்தை பெற்றிருத்தல்.

4.2 **அனுபவம் :**

ஒரு (01) வருட கால தொழில் ரீதியிலான அனுபவத்தை பெற்றிருத்தல்.

4.3 **வயதெல்லை :**

07.11.2025 ஆந் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக் கப்பட்ட அறிவித்தலுக்கு மேலதிகமானதாகும்.

விண்ணப்ப முடிவுத் திகதியன்று 21 வயதுக்கு குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாத வராகவும் இருத்தல் வேண்டும்.

4.4 **உடற்தகைமைகள்** :

அனைத்து விண்ணப்பதாரிகளும் பதவியின் கடமையினை நிறைவேற்றுவதற்கான சிறந்த உடல் மற்றும் உள ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

4.5 **ஏனைய தகைமைகள் :**

07.11.2025 ஆந் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக் கப்பட்ட அறிவித்தலுக்கு மேலதிகமானதாகும்.

I. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

II. விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தை உள்ளவராக இருத்தல் வேண்டும்.

III. விண்ணப்பதாரரின் குடும்பத்தினர் எவரேனும் இலங்கை சட்டத்தின் கீழ் எந்தவொரு குற்றத்திற்கும் குற்றவாளியாக ஆக்கப்பட்டிருத்தலாகாது.

IV. விண்ணப்பப்படிவங்கள் கோரப்படும் அறி வித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக இருக்க வேண்டிய 4.1 தொடக்கம் 4.5 வரையான அனைத்து தகைமைகளும் சகல விதங்களிலும் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

V. பாதுகாப்புத் தடைவிலக்கல் அறிக்கைகளுக்கு அமைய ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

05. கட்டமைக்கப்பட்ட நேர்முக பரீட்சையின் பெறு பேற்றின் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும். புள்ளிகள் வழங்கப்படும் விதம் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது :

| | பரீட்சை புள்ளிகள் வழங்கப்படும் விடயங்கள் | புள்ளி கள் வீதம் | சித்தி யடைய தேவை யான அதி குறைந்த புள்ளி மட்டம் |
|---|---|---|---|
| 01 | மேலதிக கல்வித் தகைமைகள் | 20 | அதிகூடிய புள்ளி களை பெற்றவர் கள் மத்தியில் திறமை அடிப் படையில் ஆட் சேர்ப்பு செய்யப் படும். |
| 02 | மேலதிக தொழிற் தகைமைகள் | 10 | |
| 03 | மேலதிக அனுபவம் | 20 | |
| 04 | கணினி அறிவு/ கணினி உபயோகிக்கும் ஆற்றல் | 15 | |
| 05 | மொழித்திறன்/ மொழித் தேர்ச்சி | 15 | |
| 06 | நேர்முக பரீட்சையில் காட்டும் திறமை | 20 | |
| | மொத்த புள்ளி | 100 | |

06. **விண்ணப்பிக்கும் முறை** :

விண்ணப்பப்படிவம் இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் அமைய வேண்டும் என்பதுடன் A4 கடதாசியில் தயாரிக்கப்பட வேண்டும். எல்லா விடயங்களும் தெளிவாக பூரணப்படுத்தப்படல் வேண்டும். சலக விதங்களிலும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப் படிவங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

07. **விண்ணப்பப் படிவத்தை அனுப்புதல்** :

இவ் அறிவித்தலில் கடைசியில் இருக்கும் மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 09.06.2026 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பவும்.

செயலாளர்,<br>
நீதிச்சேவை ஆணைக்குழு செயலகம்,<br>
த. பெ. இ. 573,<br>
புதுக்கடை,<br>
கொழும்பு.

08. விண்ணப்ப முடிவுத் திகதி 09.06.2026 ஆகும். உரிய தினத்திற்குள் தகைமைகள் அனைதசும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

09. தற்போது அரசாங்க சேவையில் (திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ சபை/ சிவில் நிறுவனங்கள்) பணி புரியும் உத்தியோகத்தர்கள், அபேட்சகர் தெரிவு செய்யப்படுமிடத்து விடுவிக்க முடியும் என்ற அத்தாட்சியுடன் நிறுவனத் தலைவர் மூலம் விண்ணப்பப் படிவத்தை அனுப்ப வேண்டும்.

10. விண்ணப்பப் படிவம் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "விசாரணை அதிகாரி தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல்" என்று தெளிவாக குறிப்பிட வேண்டும்.

(சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படுகின்ற இவ்வறிவித்தலில் மொழிக்கிடையில் ஏதாவது இணக்கபாடின்மை காணப்படின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி அறிவித்தலே சரியானதாக கருதப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.)

11. நீதிச் சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

பிரசன்ன அல்விஸ்,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
கொழும்பு 12,
2026, மே மாதம் 13.

மாதிரி விண்ணப்பப்படிவம்